**CC 184/2023**

**அ.சா. 9 பெயர் : பார்த்திபன் ( காவல் ஆய்வாளர்)**

**10.11.2025**

**எதிரி ஆஜர். எதிரி வழக்கறிஞர் ஆஜர்.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. வழக்கு சம்பவமானது இரண்டு வாகனங்கள் மோதி ஏற்பட்ட விபத்து தொடர்பான குற்ற சம்பவம் என்றால் சரிதான். இரண்டு வாகனங்களுக்கும் ஏற்பட்ட சேதத்தின் அடிப்படையில் யார் மீது தவறு உள்ளது என்று கூற இயலும் என்றால் சரியல்ல. அசாஆ.14 மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் பதிவு எண். TN 92 B 7799 கொண்ட வாகனத்தின் முன்பகுதி சேதமடைந்ததாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேலும் அசாஆ.15 மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் TN 67 BX 6183 இருசக்கர வாகனத்தின் முகப்பு விளக்கு மற்றும் வலது பக்க இண்டிகேட்டர் விளக்கானது முற்றிலுமாக சேதமடைந்ததாக காணப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி இரண்டு வாகனங்களுக்கும் முன்பகுதி சேதமடைந்து காணப்பட்டுள்ள காரணத்தினால் இரண்டு வாகனங்களும் எதிர் எதிரே மோதுவதற்கு தான் வாய்ப்புள்ளது என்றால் சரியல்ல. விபத்து நடந்த பிறகு எப்படி வேண்டுமானாலும் சேதங்கள் ஏற்படும் அதனை வைத்து மட்டும் கூற இயலாது.

2. மேற்படி இருசக்கர வாகனத்தின் பின்பகுதி சேதமடையாத காரணத்தினால் பின்னால் இருந்து வந்து வாகனம் விபத்தை ஏற்படுத்தி இருக்க வாய்ப்பில்லை என்றாலும் அதனால் நான் மேலே கூறிய சங்கதிகளானது ஏற்கதக்கதாக இல்லை என்றால் சரியல்ல. வழக்கு விபத்தில் இறந்துபோன நபரான நாகரத்தினம் பந்தல்குடி ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஊழியாராக பணி செய்தார் என்றால் சரிதான். மேற்படி நாகரத்தினம் விபத்து நடந்தபோது காலை 11.30 மணியளவில் பணி செய்வதற்காக பந்தல்குடிக்கு சென்றாரா அல்லது பணி முடித்து பந்தல்குடியில் இருந்து திரும்பி வந்தாரா என்று நான் எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். நான் சாட்சி சந்திரசேகரை (அசா.3 ) விசாரிக்கும் போது அவர் நாகரத்தினம் வதுவார்பட்டியில் உள்ள தொழுநோயாளிகளை பார்ப்பதற்காக பந்தல்குடியில் இருந்து கிளம்பியபோது விபத்து ஏற்பட்டதாக என்னிடம்

கூறியுள்ளார். வழக்கு விபத்தானது தூத்துக்குடி – மதுரை தேசிய நெடுஞ்சாலையில் மேற்கு பகுதியில் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. பார்வை மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ள இராமநாயக்கன்பட்டி விலக்கினை மாதிரி வரைபடத்தில் குறிப்பிட்டு காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான், மேற்படி இராமநாயக்கன்பட்டி விலக்கிற்கு அருகே தான் விபத்து நடந்தது, அதனால் விபத்து நடந்த இடத்தை குறிப்பிட்டு காண்பித்துள்ளேன். மாதிரி வரைபடத்தில் காண்பித்துள்ள சம்பவ இடத்திற்கு மேற்கு பக்கம் தான் மேற்படி இராமநாயக்கன்பட்டி விலக்கு அமைந்துள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்திலிருந்து தெற்கு பக்கமாக வந்து மேற்கு பக்கம் திரும்பினால் தான் மேற்படி இராமநாயக்கன்பட்டி விலக்கு வரும் என்றால் சரியல்ல, சம்பவ இடத்திற்கு வடக்கு பக்கம் சென்று மேற்கு பக்கம் திரும்பினால் தான் இராமநாயக்கன்பட்டி விலக்கு வரும்.

4. அசாஆ.14 மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் நான்கு சக்கர வாகனமானது இயக்க கூடிய நிலையில் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி காரணத்தினால் விபத்து ஏற்பட்ட பிறகு நான்கு சக்கர வாகனத்தை சாலையில் ஓட்டி செல்ல வாய்ப்பில்லை என்றால் அது எனக்கு தெரியாது. அசா.10 மீனாட்சிசுந்தரம் அவரது நீதிமன்ற விசாரணையின்போது Recovery வாகனம் மூலமாக விபத்தில் சிக்கிய நான்கு சக்கர வாகனத்தை பந்தல்குடி காவல் நிலையத்தில் எடுத்து சென்றதாக சாட்சியம் அளித்துள்ள காரணத்தினால் நான் குற்ற இறுதி அறிக்கையில் கூறியுள்ளவாறு எதிரி விபத்தை ஏற்படுத்திவிட்டு அங்கிருந்து நிற்காமல் சென்றிருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. மேற்படி காரணத்தினால் அசா.10 எனது விசாரணையின்போது போலீசார் கேட்டு கொண்டதற்கு இணங்க நான்கு சக்கர வாகனத்தை காவல் நிலையத்திற்கு ஓட்டி வந்ததாக கூற வாய்ப்பில்லை என்றால் சரியல்ல.

5. அசாஆ.12 JOB CARD ல் சொல்லப்பட்டுள்ள சேதங்களும் அசாஆ.14 மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் சொல்லப்பட்டுள்ள சேதங்களும் வெவ்வேறாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, முன்புற பாகங்கள் சேதமடைந்ததாக காண்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி

நான்கு சக்கர வாகனத்தில் ரேடியேட்டர் சேதமடைந்ததாக அசாஆ.12 ல் காண்பிக்கப்பட்வில்லை என்றாலும் அசாஆ.14 மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் ரேடியேட்டர் சேதமடைந்ததாக காண்பிக்கப்படவில்லை என்ற காரணத்தினால் அசாஆ.12 ஆவணமானது வழக்கிற்காக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, அசாஆ.12 ஆவணத்தில் FRONT BUMPER Replacement – Other jobs என்று காண்பிக்கப்பட்டுள்ளது.

6. இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சிகளாக காண்பிக்கப்பட்டுள்ள ப.சா.7, 8, 9 (கவிதா, சுதா, வசந்தா) ஆகியோர்கள் விபத்தின்போது எதிரியுடன் பயணம் செய்தார்கள் என்றால் சரிதான். மேற்படி சாட்சிகளை விசாரித்தால் வழக்கின் உண்மை தன்மை தெரியவரும் என்றால் சரிதான். இருசக்கர வாகனம் ஓட்டி வந்த நபரின் கவனக்குறைவால் தான் வழக்கு விபத்தானது நடைபெற்றது என்றாலும் எதிரிக்கும் வழக்கு விபத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும், இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர் தேசிய நெடுஞ்சாலையில் விதிகளை மீறி எதிர் திசையில் வந்த காரணத்தினால் தான் விபத்து ஏற்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. வழக்கில் இறந்த நபருக்கு இழப்பீட்டு தொகை கிடைக்க வேண்டும் என்ற காரணத்திற்காக கருணை அடிப்படையில் அவரை பாதிக்கப்பட்டவராக காண்பித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை**